## ஒன்றான பேரருளாள ராமாநுஜ ஜீயர்

## திருநாள் பாட்டு

நீரார் செஞ்சடையானொடு பங்கயன் நின்று பணிந்திடு நாள்
நிதமுழல் பாமரர் பாகவதோத்தமர் நீர்மை பொருந்திடு நாள்
பாரார் செந்தமிழ் மாமறை பயில்வோர் பரிதியெனத் திகழ் நாள்
பரமத குஞ்சர பஞ்சானனமாய்ப் பாரில் விளங்கிடு நாள்
சீரார் குறுங்குடி மாநகர் நம்பியும் தேசு பொலிந்திடு நாள்
சிறந்த பெரும்பூதூர் முனிவன் புகழ் சேர்ந்து விளங்கிடு நாள்
பேரருளாள ராமாநுஜ சீயரின் பெருமை விளங்கிடு நாள்
பிறங்கிய மேடந்திகழ் திருவோணப் பேர் பெறு திருநாளே

---